ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

மதுரகவி தாசன் இயற்றிய

# திருவேங்கடத்தான்

ஏழ் மலையும் ஏழ் கடலும்
ஏழ் விசும்பும் காத்தருளும்
சூழொளி சேர் திருவேங்கடத்தான்
சூழ்ந்தென் மனம் நிறைந்தானே க

வனம் மேவிய மலையின் மேல்
சுனைமலர் சூழ் திருவேங்கடத்தான்
கனம் மேவிய அரக்கனைச்
சினந்தென் மனம் நிறைந்தானே உ

அனந்தன் மேல் அயராது நின்று
அனைத்துலகும் காத்தளிக்கும்
நினைவரிய திருவேங்கடத்தான்
நினைந்தென் மனம் நிறைந்தானே ௩

மலை ஏழின் மேல் நின்று
சிலை வளைத்து உலகளிக்கும்
கலை வாணர் தொழும் வேங்கடத்தான்
நிலை நின்றென் மனம் நிறைந்தானே ச

முகிலவை சூழ் மலை ஏழில்
அகல்ஞாலத்தைக் காத்தருளும்
நிகரில்லா திருவேங்கடத்தான்
புகுந்தென் மனம் நிறைந்தானே ரு

உயர்ந்தெழுந்த ஏழ் மலையில்
உயர்வறுக்கும் திருவேங்கடத்தான்
அயர்வின்றி அனைத்தையும் காத்து
துயக்கறவென் மனம் நிறைந்தானே சா

மஞ்சு தவழ் மலை மீதில்
தஞ்சம் அடைந்தாரைக் காத்தருளும்
மிஞ்சு புகழ் திருவேங்கடத்தான்
அஞ்சலற என் மனம் நிறைந்தானே எ

நீள்மலை மேல் தான் நின்று
வாளவுணன் மார்விடந்து
நீள்புகழ் திருவேங்கடத்தான்
மாள்வறவென் மனம் நிறைந்தானே அ

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஶ்ரீமதே இராமாநுஜாய நம:

காரார்ந்த மலை உச்சியின் மேல்
சீரார் புகழ் திருவேங்கடத்தான்
நீரார்ந்த இந்நிலத்தினைக் காத்து
ஆராது என் மனம் நிறைந்தானே கூ

நிறைந்து மனம் புகுந்தானை
நிறை உலக்குக்கு நாயகன் தன்னை
நிறை வேங்கடத்தானைப் பணிந்தான்
நிறை காஞ்சியின் அனந்தன் வேங்கடார்யனே க0

---